# சுதேசமித்திரன்

நமக்குத் தொழில் நாட்டுக்கு உழைத்தல் இமைபொழுதும் சோராதிருத்தல்.

சக்கரம் 1 ஆரம் 10

பிப்ரவரி 2016



# தேவை

## அறி

**கார். அகிலன்**

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பிரான்சு தலைநகர் பாரிசில் உலக காலநிலை மாநாடு நடந்தது. இதில் பைங்குடில் வாயு வெளியேறுவதைத் தடுக்கும் நோக்கில் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஏறக்குறைய அனைத்து நாடுகளுமே இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. மற்றுமொரு முக்கிய நிகழ்வு, உணவு வீணாவதைத் தடுக்க அனைத்துலக நாடுகளும் சேர்ந்து செயல்பட வேண்டும் என்று முடிவானது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், ஓராண்டிற்கு 1.3 பில்லியன் டன் உணவு வீணாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 870 ஆயிரம் மக்களின் உணவுக்கு ஈடானது இது. மூன்றில் ஒரு பங்கு ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் உண்ணப்படாமலேயே வீணாக தூக்கியெறியப் படுகின்றன. உணவின்றி பசியால் தவிக்கும் மனிதர்கள் வாழும் இதே புவியில் ஓராண்டிற்கு இவ்வளவு உணவுப் பொருட்கள் வீணாவது எவ்வளவு வேதனை?

மேலும், உணவு தயாராக அப்பொருட்கள் எடுத்துக்கொண்ட ஆற்றல் கரியமிலவாயுவாக வெளியேறுகிறது, உணவுப்பொருட்கள் அழுகியபின்பு மீத்தேன் வாயுவும் வெளியேறுகிறது. குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் 3.3 கிகா டன் கரியமில வாயுவை வெளியிடுகிறது வீணாக நாம் தூக்கியெறிகிற உணவுப்பொருட்கள்.

உணவு தூக்கி வீசப்படும் வேளையில், உணவு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட நீரும், நிலமும், உழைப்பும் தூக்கி வீசப்படுகின்றன என்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தைச் சேர்ந்த பார்பரா எக்வால். மேலும் அவர் குறிப்பிடுகையில், வீணாகும் உணவுப்பொருட்களை ஒன்று சேர்த்து ஒரு நாட்டை உருவாக்கினால், பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்தும் உலகின்

மிகப்பெரிய நாடாக அது இருக்கும், நிலப்பரப்பு அடிப்படையில் உலகின் இரண்டாவது பெரிய நாடாக இருக்கும், பைங்குடில் வாயுவை வெளியிடும் உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும் அது இருக்கும்.

உணவுப் பொருட்கள் விரயம் செய்வதில் பணக்கார நாடுகள் முன்னிலையில் உள்ளன. அமேரிக்கா தனது ஓராண்டு உணவு உற்பத்தியில் 40 விழுக்காடு உணவுப் பொருட்களை வீணாக்குகிறது. மொத்த உற்பத்தியில் 52 விழுக்காடு பழங்கள் மற்றும் காய்கறிகள் வீணாகின்றன. 50 விழுக்காடு கடல்சார் உணவுப்பொருட்களும், 38 விழுக்காடு தானிய பொருட்களும், 22 விழுக்காடு இறைச்சியும் வீணாகின்றன.

சிறிதளவு குறைபாடுகள் இருந்தாலும், பழங்களும் காய்கறிகளும் பல்பொருள் அங்காடிகளால் நிராகரிக்கப் படுகின்றன. மொத்த வியாபாரத்தின் பொழுது விலையில் ஏற்ற இறக்கம் இருப்பதனால் பயிர்கள் விற்பனையில் தடங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறாக நிராகரிக்கப்படும் காய்கனிகளும் விற்பனை அடையாத பயிர்களும் வீணாக தூக்கி வீசப்படுகின்றன.

குளிர்சாதன பெட்டிகளில் பல நாட்களாக இருக்கும் பொருட்கள் வெளியேற்றப் படுகின்றன. மொத்தமாக வாங்கி வைத்துக்கொள்ளும் பழக்கம் ஏற்பட்டவுடன் உணவு பொருட்கள் வீணாவது அதிகரித்து வருவதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

தற்பொழுது, உலகம் முழுவதும் ஏறக்குறைய 800 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உணவின்றி தவிக்கின்றனர். ஆப்ரிக்காவில் வீணாகும் உணவுப்பொருட்கள் மட்டும் 300 ஆயிரம் பேருக்கு உதவும். 2050-ல் தற்போதைய உணவுத்தேவையை விட 60 விழுக்காடு கூடுதல் உணவு தேவைப்படும். என்ன செய்யப்போகிறோம் நாம்? மீண்டும் மீண்டும் நாம் செய்துவரும் பிழையை செய்யப்போகிறோமா? சிந்தியுங்கள் தோழர்களே, தேவை அறிந்து தயாரிப்போம். வளம் சேமிப்போம்.



# தமிழன்

## என்னும் அரசியல்

க. விசயகிருசுணன்

தமிழ், உலகில் தோன்றிய மொழிகளில் மூத்த மொழி, தமிழன் உலகின் மூத்த இனம் தமிழினம். இன்றைக்கு இருக்கும் தென்னகத்து மொழிகள் யாவும் தமிழிலிருந்து மருவி உருவானதே, இதை யாராலும் மறுக்க இயலாது. உலகின் மூத்த இனம் தமிழினம் எனில் இன்று பல இடங்களில் வாழும் பல மக்களும் ஒரு காலத்தில் தமிழர்களாக இருந்தவர்களாகவே இருக்க வாய்ப்புள்ளது, அப்படி இருக்கையில் தமிழர்கள் என்று எவரை அழைப்பது? இவர்களில் யார் முதலில் தோன்றிய தமிழினத்தின் வழி தோன்றல்?

உண்மையில் தமிழ் என்பது ஒரு மொழியானால் அந்த மொழியை உணர்வோடு நேசிக்கும் ஒவ்வொருவருமே தமிழர்கள் தான். இன்று தமிழின காவலர்கள் என்று தன்னை தானே கூறிக்கொண்டு திரியும் பலரில் எத்தனை பேருக்கு உண்மையான மொழிப்பற்று உள்ளது. இவர்களில் எத்தனை பேர் உண்மையில் தமிழர்களின் முன்னேற்றத்திற்காக குரல் கொடுக்கிறார்கள். இன்றைய நிலையில் தமிழன் என்பவன் இவர்கள் செய்யும் அரசியல் சதுரங்கத்தில் ஒரு பகடை காய் மட்டுமே. பாரதத்தில் சிறந்த பகடை உருட்டும் சகுனியாகவே இங்கு தன்னை தமிழின காவலர்களாக அறிவித்துகொண்டவர்கள் யாவரும் உள்ளனர். இதில் யாருக்கு திறமை அதிகம் உள்ளதோ அவர்களுக்கு தகுந்தாற்போல் பகடையை உருட்டி தங்களின் ஆதாயத்தை தேடிக்கொள்கின்றனர்.

இங்கு தமிழன் என்று கூறிக்கொண்டு வந்த எவராலும் உண்மையில் தமிழரின் வாழ்க்கை நிலை மாறியதில்லை. ஆனாலும் மீண்டும் மீண்டும் அவர்களின் பொய்யான பகடிக்கு நாம் பலியாகிக்கொண்டு தான் உள்ளோம். நம் பக்கத்து தேசத்தில் லட்சக்கணக்கான தமிழர்களை கொன்று குவித்த பொழுதும் இந்த தன்னல தமிழ் தலைவர்கள் வெளியே நின்று சத்தம் வராமல் குரல் கொடுத்தார்களே தவிர அவர்களை காக்கும் எந்த ஒரு முயற்சியையும் எடுக்கவில்லை. பிறகென்ன இவர்கள் தமிழ் காவலர்கள். இனத்தை அழித்த பின் மொழியை யாரைக்கொண்டு இவர்கள் காக்கப்போகிறார்கள்?

தேர்தல் நெருங்கிவிட்டது மீண்டும் அதே ஒலி எங்கும் கேட்கத் துவங்கிவிட்டது தமிழர்கள் நாம். மீண்டும் அவர்களில் சதுரங்க ஆட்டத்தில் பகடைகளாக நம்மை உருளச்செய்ய போகிறார்கள். இவர்களை காட்டிலும் பல தேசங்களிலிருந்து இங்கு வந்து தமிழை ஆர்வமுடன் கற்று தமிழுக்காகவும் தமிழருக்காகவும் வாழ்பவர்கள் பெருமையுடன் கூறிக்கொள்ளலாம் நாங்கள் தமிழர்கள் என்று. தமிழை பேசும் அனைவரும் தமிழனென்றால் இதில் எங்கிருந்து ஜாதி என்ற ஒன்று உள்ளே நுழைந்தது. தமிழை வைத்து அரசியல் புரியும் இவர்களின் ஆயுதம் தான் இந்த சாதி. தமிழ் பேசினாலும் சாதியை வைத்து அவர்களை பிரித்தாள்வது. இவர்களால் தான் தமிழ் வாழ்ந்துகொண்டிருக்கிறது என்ற ஒரு மாயையை மக்கள் மனதில் உருவாக்குவதே இவர்களின் நோக்கமாக உள்ளதே தவிர உண்மையில் தமிழையும் வளர்க்கவில்லை, தமிழர்களையும் வளர விடவில்லை.

இனி வரும் காலங்களிலாவது உண்மையில் யார் தமிழையும் தமிழனையும் நேசிக்கிறார்களோ அவர்களை வழிகொண்டு முன்னேறி செல்வோம். இல்லையெனில் வரும் காலத்தில் தமிழனென்று அயல் தேசத்தவன் கூறிகொண்டிருப்பான், உண்மை தமிழன் தன் அடையாளத்தை தொலைத்துவிட்டு எங்கோ மறைந்திருப்பான்.



## அகரம்...அஃகு உசிதம்

கெஜலக்ஷ்மி

அன்புமிகு பாராட்டுவது உசிதம்
ஆசையைப் பேராசையாக்காமல் உசிதம்
இறைவனைப் போற்றுவது உசிதம்
ஈன்றார்களை மறக்காமலிருப்பது உசிதம்
உவகையுடன் உதவுவது உசிதம்
ஊக்கம் நலிந்தோர்க்களிப்பது உசிதம்
எண்ணங்களை ஆள்வது உசிதம்
ஏற்றம் தரும் சிந்தனை உசிதம்
ஐயமின்றி முயற்சி ஏற்பது உசிதம்
ஒற்றுமை ஓங்க உழைப்பது உசிதம்
ஒளவியம் போற்றாமலிருப்பது உசிதம்
எஃகு போன்ற குறிக்கோள் உசிதம்

## பாரதமாதாவின் ஜாதகம்

விடுதலை போராட்ட ஈகி **திரு. வேம்பத்தூர் கிருசுணன்** எழுதிய நூலிலிருந்து. தொடர்.

பானிபட் தலைக் கோட்டைப் போர்கள் (1565)
மாநிலமெங்கும் ரத்தநெடி!
பதினேழாம் நூற்றாண்டின் - ஆரம்பமே
கிழக்கிந்தியக் கம்பெனிதான்! (1600)
பழவேற்காட்டில் டச்சுக்காரர்களின்
பண்டக சாலை உண்டானது (1609)
பாரத சூரத் மா நகர்நடுவே
ஆங்கிலேயரின் படைவீடு (1611)
பரங்கியர் வாணிபக் கம்பெனியின்
வரம்புகள் மீறிய செயல்பாடு (1618)
பாரததேவியின் தவத்தாலே
சிவாஜிமன்னர் அவதாரம் (1630)
வங்காளத்தில் தங்குமிடத்தை
வாங்கி அமர்ந்தனர் துரைமார்கள் (1634)
வாழைமரம் கட்டி சென்னையில் கோட்டை
கட்ட வெள்ளையர் பூசையிட்டார் (1639)
பாண்டிச்சேரி கவர்னர் டூப்ளே
பதினெட் டாவது நூற்றாண்டில் (1742)
பயங்கர அடக்கு முறைகாட்டி
பாய்ந்தனர் தளபதி ராபர்ட் கிளைவ் (1751)
வந்தவாசியில் போர் முழக்கம்
ஹைதரலி, திப்புசுல்தான் கள் (1761)
எந்தப் போரிலும் வடநாட்டுசெய்தி
ஏனோ தமிழகம் மறக்கப்பட்டது (1779)
இந்திரா காந்திக்கு, தந்தையார் நேரு
எழுதிய கடிதத்தில்
இந்திய வரலாற்றின் பிள்ளையார் சுழி
குமரிமுனை என்றார்.
வந்தனை செய்வோம் நேருபிரானை
வாழ்த்தி வணங்கிடுவோம்
வாழையடிவாழை மூன்று தமிழ்ச் சங்க
வரலாறுகள் எங்கே?

# தாவரங்களின் தந்திரங்கள்

மரியா பெல்சின்



சீந்தில் கொடி இனத்தைச்சேர்ந்தது. இது மலை மற்றும் மலை அடிவாரங்களிலும், பெரிய காடுகளிலும், நதிகளின் ஓரங்களிலும் படர்ந்து வளரக்கூடியது. சீந்தில் கொடியின் இலை, கொடி, வேர், கிழங்கு என எல்லாமும் மருந்துக்கு பயன்படக்கூடியவை. சீந்தில் கொடியில் இருந்து தயாரிக்கப்பட்ட சீந்தில் சர்க்கரை அரை அரிசி அளவு எடுத்து சுண்டைக்காய் அளவு பனைவெல்லத்துடன் சேர்த்து பிசைந்து காலை வெறும் வயிற்றில் தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டு வந்தால் படர்தாமரை, காளாஞ்சகப்படை, தவளைக்கடி உள்ளிட்ட நோய்கள் சரியாகும்.

வயிற்று உப்புசம், நாள்பட்ட செரியாமை மற்றும் வயிற்றுக்கோளாறுகளால் அவதிப்படுவோருக்கும் சீந்தில் கொடி அருமையான மருந்தாக அமையும். அதாவது சீந்தில் கொடி 30 கிராம், கொத்தமல்லி (தனியா) 5 கிராம், அதிமதுரம் 5 கிராம், சோம்பு 2 கிராம், பன்னீர்ப்பூ 2 கிராம் சேர்த்து நன்றாக கொதிக்க வைத்த 200 மில்லி தண்ணீரை சேர்த்து சுமார் ஒரு மணி நேரம் ஊற விட வேண்டும். அதில் அரை அவுன்ஸ் வீதம் காலை, மாலை என சாப்பிட்டு வந்தால் மேற்சொன்ன நோய்கள் மட்டுமல்லாது உடலை வன்மையாக்குவதோடு அழகூட்டவும் செய்யும்.

## இம்மாத நிகழ்வு - அரசியல் பேசலாம் வாங்க

நீண்ட தினங்களுக்கு பிறகு லோக்சத்தாவின் ஒரு பொது நிகழ்ச்சி. நீண்ட நாட்களாக உத்தேசித்து வரும் நிகழ்வு கூட.

கொள்கை சார்ந்த அரசியல் கலந்தாய்வுகள் நாளுக்கு நாள் குறைந்தே வருகின்றன. கொள்கை என்பது எது என்பதில் கூட சில குழப்பங்கள் நிலவுகிறது.

அதனை போக்கும் வண்ணம் கொள்கை சார்ந்த, அதே சமயம் மாற்று கொள்கைகளுக்கு, கருத்துகளுக்கு ஒரு களம் அமைக்கும் முயற்சியை லோக்சத்தா துவக்குகிறது.

முதல் தலைப்பாக - கல்வி கொள்கை.

ஒரு பக்கம் கல்வி என்பது அரசாங்கம் மட்டுமே செய்ய வேண்டிய சேவை. தனியாருக்கு இதில் துளி இடமில்லை. கல்வி சீரழிந்து போனதற்கு தனியார் மட்டுமே காரணம் என்ற 'பொதுவுடைமை' தத்துவத்தின் அடிப்படை கொண்ட வாதங்கள்.

கல்வியை யார் கொடுத்தால் என்ன? - கல்வி தரமானதாக, இலவசமாக இருந்தால் போதுமே. இன்று உலகளவில் நாம் கல்வியில் மிக மோசமாக இருந்தாலும், இந்திய அளவில் ஓரளவிற்கு சிறந்து விளங்க காரணம் - தனியார் பள்ளிக்கூடங்கள்தானே என்ற தனியார்மயத்தை ஆதரிக்கும் 'தாராண்மை தத்துவத்தின் அடிப்படை கொண்ட வாதங்கள்.

இருவருக்கும் கல்வியில் நாம் சிறப்பான இடத்தை அடைய வேண்டும் என்ற முனைப்பு. எது சிறந்த வழி என்பதில் மாற்று கருத்து. மாற்றுக் கருத்துகளை, மாற்று சிந்தனைகளை மக்கள் முன்வைக்கும் ஒரு தளமாக இந்த நிகழ்வு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் - நம் தேவை தரமான, இலவசமான கல்வியே (தனியாரை ஆதரிக்கும்) என்று ஒரு அணியும் நம் தேவை தனியார் எதிர்ப்பே (அரசாங்கம் மட்டுமே கல்வியை தர வேண்டும்) என்று ஒரு அணியும் விவாதிப்பார்கள். ஒவ்வொரு அணியிலும் 3 ஆளுமைகள். ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள் என முதல் 1 மணி நேரம் ஒவ்வொரு அணிக்கும் 30 நிமிடங்கள்.

அடுத்த 1 மணி நேரம் பார்வையாளர்களுக்கானது - முதல் 30 நிமிடங்கள் ஒவ்வொரு பார்வையாளரும் தங்கள் கருத்தை சுருக்கமான பதிவிடும் நேரம், அடுத்த 30 நிமிடம் பார்வையாளர்களுக்கான கேள்வி பதில் நேரம்.

கடைசி 20 நிமிடங்கள் - இரு அணிகளில் இருந்தும் ஒருவருக்கு மட்டும் 10 நிமிடம். (இறுதிச்சுற்று)

இடம்: சினி சிட்டி ஹோட்டல், கோடம்பாக்கம்
நாள்: பிப் 21, ஞாயிறு
நேரம்: மாலை 4 - **6.30** வரை




சிறப்பு விருந்தினர்கள்:

1. திரு. பாடம் நாராயணன்
2. திரு.அருமைநாதன்
3. திரு. பத்ரி சேஷாத்ரி, கிழக்கு பதிப்பகம்
4. திரு. மகேஷ், லோக்சத்தா
5. திரு.அகிலன், லோக்சத்தா
6. திரு. ராசன் காந்தி, இளந்தமிழகம் இயக்கம்.

இது அவசியம் என நினைப்பவர்கள் அவசியம் கலந்துகொள்ளவும். மற்றவர்களுக்கு பகிரவும்.

- ஜெகதீஸ்வரன், லோக்சத்தா

## பேச்சு - சில உளவியல் ஆலோசனைகள்!

1. மற்றவரிடம் பேசும்போது, கைகளை கட்டிக் கொள்ளாதீர்கள். அது உங்களை பலவீனமானவராக காட்டும்.

2. மற்றவரின் கண்களை நேராகப் பார்த்து பேசவும். அது உங்களை நேர்மையானவராகக் காட்டும்.

3. மிகத்தொலைவிலிருந்து மற்றவரோடு குரலை உயர்த்திப் பேசாதீர்கள்.

4. நீங்கள் பேசுவதை மற்றவர் கேட்க வேண்டுமானால் அவர் முகத்தைப் பார்த்து பேசவும்.

5. நேராக அமர்ந்து அல்லது நின்று பேசவும். கூன் போட்டு அமர்ந்தால் மற்றவர் உங்களை சோம்பேரி என நினைக்கக்கூடும்.

6. பேசும்போது முடியை கோதிக் கொள்வதையோ அல்லது அடிக்கடி உடைகளை சரிப் படுத்துவதையோ தவிர்க்கவும். அது உங்களை நம்பிக்கையற்றவராகக் காட்டும்.

7. நகத்தையோ, பென்சில் / பேனா முனையையோ கடிப்பதை தவிர்க்கவும். அது உங்களை பயந்தவராக காட்டக்கூடும்.

8. நம்பிக்கையோடு கூடிய புன்னகை, நீங்கள் சொல்வதை கேட்க விரும்பாதவரையும் கேட்கவைக்கும்.

9. குழந்தைகளோடு பேசும்போது, அருகில் அமர்ந்து பரிவோடு பேசவும்.

10. உங்கள் பேச்சை விளக்குவதற்கு, உங்கள் கைகளையும் பயன்படுத்தவும். சைகைகள் நீங்கள் சொல்வதை மேலும் விவரிக்கும்.

சமூக ஊடகத்தில் வெளியான பதிவு.

**பதிவிட்டவர்: சுரேஷ் குமார்.**

**https://www.facebook.com/EasyMathsSuresh**

# சமூக அக்கறையுள்ள அமைப்புகளின் கடந்தமாத பணிகள்

சனவரி 29-ம் நாள் படிக்கட்டு பயணம் பற்றிய விழிப்புணர்வு பரப்புரை சென்னையில் பல்வேறு இடங்களில் நடந்தது. 67-வது குடியரசு நாளை குறிக்கும் வகையில் நடத்தப்பட்ட இந்த பரப்புரை சென்னையின் 67 இடங்களில் நடந்தது.

விடுதலை நாளையும், குடியரசு நாளையும் மிட்டாய் திருவிழாவாக மட்டுமே பார்க்கும் மாணவர்களை நாட்டு பணி செய்ய ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்நிகழ்வு நடத்தப்பட்டது.

“சென்னை போன்ற நகரங்களில் படிக்கட்டு பயணத்தின் போது ஒரு நாளைக்கு மூன்று விபத்துகள் விகிதம் மாதத்திற்கு 90 விபத்துகள் சராசரியாக நடக்கின்றன. அதில் குறைந்தது 2 விபத்துகள் உயிரிழப்பை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் உயிரிழக்கும் விபத்துகள் அதிகம்.” என்கிறார் பரப்புரையின் ஒருங்கிணைப்பாளர் திரு. இராதா கிருட்டிணன்.

மேலும் அவர் கூறுகையில். “இளைஞர்கள் அதிகம் உள்ள இந்தியா இதுபோன்ற விபத்துகளால் இளையர்களை இழந்து வருகிறது. இதை தவிர்க்க எங்களால் இயன்ற பங்களிப்பை தருகிறோம்.” என்றார்.

இதுபோன்ற விழிப்புணர்வு பரப்புரை நிகழ்வுகள் தமிழகம் முழுவதும் மாணவர்களின் ஒத்துழைப்புடன் நடத்திட அனைத்து தன்னார்வ அமைப்புகள் முன்வரவேண்டும்.




தங்களது மேலான ஆலோசனைகளுக்கும் பங்களிப்பிற்கும் தொடர்புகொள்ளுங்கள்.
மின்னஞ்சல் : emagz@thozhan.org
பேசி: 8122195591